செய்தி வெளியீடு எண். 291 நாள்: 12.08.2021

**திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள அரசு மருத்துவமனைகளில் தற்காலிக பணியிடங்களில் பணிபுரிய விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது - மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.ஆல்பி ஜான் வர்கீஸ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

திருவள்ளூர் மாவட்ட மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இணை இயக்குநர் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் அரசு மருத்துவமனைகளில் மருந்தாளுநர், ஆய்வுக்கூட நுட்புநர் (ம) நுண்கதிர் வீச்சாளர்கள் கொரோனா கட்டுப்பாட்டு பணிகளுக்கு தற்காலிகமாக மாதம் ரூ.12000/- வீதம் 6 மாதங்களுக்கு மட்டும் பணியமர்த்தப்பட உள்ளனர்.

அதன்படி மருந்தாளுனர் - 6, ஆய்வக நுட்புநர் - 6 (மற்றும்) நுண்கதிர் வீச்சாளர் - 6 பேரும் தேவைப்படுகிறார்கள். பணியிடங்களுக்குரிய தகுதியுள்ள விண்ணப்பங்கள் 25.08.2021 அன்று மாலை 5 மணிக்குள் நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ, இணை இயக்குநர் (மருத்துவம் (ம) நலப்பணிகள்), J.N. சாலை, திருவள்ளூர் என்ற முகவரியில் சமர்ப்பிக்கலாம் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.ஆல்பி ஜான் வர்கீஸ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**